பொதுவானவை

(40)

# காலத்தால் கலையாத

# கடமை

யாழ்ப்பாணக் கல்லூரி
நூலகம்
இலக்கம்: ..........
திகதி: ..........



பயிற்சிபெற்ற ஆசிரியர் மன்றம்
பலாலி

யா/யூனியன் கல்லூரி
நூலகம்
இலக்கம்: 369
திகதி:

காலத்தால் கலையாத

# கடமை

திரு. ஆர். எஸ். நடராஜா அவர்களின்
கட்டுரைகளின் தொகுப்பு

யா/யூனியன் கல்லூரி
நூலகம்
இலக்கம்: 369
திகதி:

1994

A. Kiritharan.
SP. TR, COMMERCE
அ. கிரிதரன்
விசேட பயிற்சி வர்த்தகம்

பயிற்சிபெற்ற ஆசிரியர் மன்றம்
பலாலி

# உதாரண புருஷன்

ஆசிரியத்துவம் - எப்படி இருக்கவேண்டுமென்பதற்கு ஒரு உதாரண புருஷன் என் குரு இ. சு. நடராசா அவர்கள். 1971 ம் ஆண்டு கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை.... என் நினைவுகள் பின்நோக்கிச் சிந்திக்கின்றன. கல்வித்தத்துவங்கள் கடலலைகளாக திரண்டெழுந்து எம்மவரை அறிவுமழையில் ஆர். எஸ்.மூலம் நனைத்த நினைவழியா நாட்களவை. அன்பின் உறைவிடம். கல்விச் சிந்தனைகளின் நல்லூற்று. ஏழை மாணவர்களின் உயர்வுக்குழைக்கும் நல்லிதயம் இத்தனையும் அவர் வடிவம். அவர் சேவையினின்று ஓய்வு பெறவில்லை. இனிமேல்தான் சமுதாயம் அவரின் சேவையை எதிர்பார்க்கின்றது. நீடூழி வாழ்ந்து வளம் தர இறைவனை வேண்டுகிறேன்.

அ. மு. அருணாசலம்
அதிபர்

யா / மானிப்பாய் மெமோறியல்
ஆங்கில பாடசாலை,
மானிப்பாய்.



திரு. ஆர். எஸ். நடராஜா M. A., S. L. E. A. S.

ஓய்வுபெற்ற அதிபர்
பலாலி ஆசிரியர் கலாசாலை
திருநெல்வேலி

# அணிந்துரை.....

அன்பர் R. S. நடராசாவின் கட்டுரைகள் ஐந்தினை உள்ளடக்கியதாக இச் சிறுநூல் வெளிவருகின்றது. திரு. நடராசாவின் அனுபவ முதிர்ச்சியினையும் சிந்தனை வெளிப்பாட்டினையும் இதனுள் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

கலைத்திட்டம், கற்பித்தல் முறைமை, கல்விச்செயற்பாடு ஆகிய துறைகளைத் தழுவியதாக ஐந்து கட்டுரைகளும் அமைந்துள்ளன. படிப்போர் உள்ளத்தில் செறியக்கூடியவகையில் ஆசிரியருடைய மொழிநடை விளங்குகின்றமை பாராட்டுக்குரியது. கல்வியுலகில் காலடி வைப்பவர்கள் இந்நூலைப் படித்துப் பயனடைவர் என்பதில் சந்தேகமில்லை.

பள்ளிக்கூட மட்டத்திலும் ஆசிரியர் கல்லூரிமட்டத்திலும் தமது பழுத்த அனுபவத்தின்மூலம் வழிகாட்டிய திரு. நடராசா தொடர்ந்து இதுபோன்ற வழிகளில் கல்வியுலகுக்குச் சேவை செய்யவேண்டும். அவருடைய அன்பர்களும் அபிமானிகளும் இந் நூலை வெளியிட மேற்கொண்ட முயற்சிகளைப் பாராட்டி, திரு. நடராசாவின் தொண்டு மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

வ. ஆறுமுகம்

கல்வியியற் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.
11 - 07 - 1994.

# உள்ளே

1. இணைந்த பாடவிதானச் செயற்பாடுகள்
1980 — ஆண்டு மலர்
விவசாய மன்றம், பலாலி ஆசிரியர் கலாசாலை

2. யாருடைய பொறுப்பு?
From: The Henrician — 1979

3. சமுதாய வளர்ச்சியில் ஆசிரியர் பங்கு
தமிழர் ஆசிரியர் சங்கம் நடாத்திய கருத்தரங்கில்
ஆற்றிய உரைத் தொகுப்பு

4. ஆசிரியரின் சிந்தனைக்கும் செயற்பாட்டிற்கும்
உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய
பவள விழா மலரிலிருந்து எடுக்கப்பட்டது.

5. சாந்துணையும் கற்க
கலைஞானம் 81 / 82

# சேவைநலன் பாராட்டு வாழ்த்துப்பா

இராமநாதர் சுந்தரம் பிள்ளை மகனானார்.
    தேடிவரும் ஆசிரியச் செல்வம்தாலானார்
யாவும் அறிந்திடுமியல்பு தானடைந்ததாலோ
    ஞானநடராஜன் நாமமமைந்திட்டார்
பெருந்தீவில் பிறந்து இள வாலையுறவானார்
    அருங்கலைகள் பலபயின்றா சிரியவாண்மைபெற்றார்

விழிஅசைவில் மொழி தவழும் அறிவழகில் உலகளவும்
    விளங்குபுகழ் திகழ வருவார்
எளிய நடை இசையும்தமிழ் எளிமையென குலவுமிவர்
    இனிமை மிகு தமிழின் மகனே
அருமைமிகு உணவெனினும் அருகிலதைப் பகிர்ந்து ரசித்
    தருந்து மொரு சிந்தையாளன்
தாமுடைய பலருடைய மனமிணைய மணவிழவை
    தானனுமதித் திணைத்தோன்
வளமிழந்த கலாசாலை வளம் பெருக வழியமைய
    முழு அளவில் தினமுழைத்தோன்
கலையெனினும் கவியெனினும் பலனைத் தருவிளைநிலங்கள்
    உழுது பயிர் தழைய விளைத்தோன்
கருணைவரும் தேவையெனின் கனலும் வரும் புனலும் வரும்
    மறுபொழுதில் உவகை மிளிரும்
கலைபயில வந்தவர்க்கு உறுதோழன், தாய், தந்தை,
    குருவாக அமைந்த மேதை
பாடலுடனாடல், விளை யாடலுடன், வெள்ளை மொழி
    கூடல் விஞ்ஞான, கணிதம்
வேதம், விவசாயமுடன், வாணிபமும், சேர்த்த புகழ்
    மேவும் மா மனிதர் ஆர். எஸ். .

விழிகளினால் உளவியலும் மொழிகளினால் ஆங்கிலமும்
    விளங்குமொரு நிலையில் புகட்டி.
ஆழவிரி கல்வியியல் ஆளுமைகள் தலைமை பெறு
    வேறும் பல கலைகள் ஈந்தார்
வானினுடுக் கோலங்கள், ஆய்வுகூடப் பாடங்கள்
    தேனினினிதாக அமைத்து
நாடகத்தின் ஆழங்கள், வாழ்க்கைத்திறன் பாடங்கள்
    சேர்ந்துபெறப் பயிற்சி அமைத்தார்
ஞானமிளிர் சோலைதனை நாலும் பயில் சாலையென
    பாலமமைத்தீந்த அறிஞன்

கல்வியியலாளன், கடலாழ அறிவானோன்
கடமை தவறாதோன், உடல்உள்ளம் தளராதோன்
ஆண்டில் சதம் கண்டு, இந்த அகிலம் புகழ் கொண்டு
வாழ்க, வாழ்க, நீடுகாலம் குடும்பம் கூடி வாழ்கவே!

# 1

# இணைந்த பாடவிதானச் செயற்பாடுகள்

பாடவிதானம் அல்லது கலைத்திட்டம் என்னும் சொல் கல்விச் செயற்பாடுகள் யாவையும் உள்ளடக்குவதாகும். எனினும் இச்சொல்லின் முழுமையான பொருளும் எல்லாக் காலத்திலும் எல்லா மக்களாலும் சரியாக உணரப்படுவதில்லை. கல்விச் செயற்பாட்டில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்பு கொண்டுள்ள பலரும் பற்பல காலப்பிரிவில் பாடவிதானம் எனும் சொல்லுக்கு தத்தமது நோக்குக்கு ஏற்பவே விளக்கந்தந்து செயற்பட முனைகின்றனர். அண்மைக் காலத்தில் பாடத்தொகுப்பு, பாடநூல்கள், பாடத்திட்டம், பாட வழிகாட்டிகள், பாடக்குறிப்பு, மதிப்பீடு என்பவைதான் பாடவிதானத்தின் முக்கிய அம்சங்களாக கருதப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன. பூரணமான பொருளுணர்ந்து கலைத்திட்டம் செயற்படுத்தப் படாததால் கல்வியின் பூரணமான பயனை சமூகம் பெறுவது சாத்தியமாகாது. இன்று சமூகம் எதிர்நோக்கும் பல்வகைப் பிரச்சனைகளுக்கும் தீர்வுகாண சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் பாடவிதானத்தில் மீளாய்வு செய்யும் முயற்சியும் மேற்கொள்ளப்படுகின்றது. இம்மீளாய்வினைச் செய்வதன் மூலம் கல்வித்திட்டத்திலும் அதன் செயற்பாட்டிலும் உள்ள குறைகளை நீக்கி வாழ்க்கைப் பிரச்சனைகளுக்கு சுமுகமான தீர்வுகாணலாம் என்னும் நம்பிக்கையடிப்படையில் எழுவதாகும்.

இன்றைய கல்விச் செயற்பாட்டினை திறனாய முற்பட்டால் அதனை ஒரு பரீட்சையை இலக்காகக் கொண்ட செயற்பாடாகவே கருத வேண்டியுள்ளது. செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள யாவரிடத்தும் பரீட்சையில் சித்தியடைவதையே இலக்காகக் கொண்டு இயங்கும் தன்மையினைக் காணலாம். அண்மைக் காலத்தில் உருவாகிவரும் பிரத்தியேக கல்விப்போதனா நிலையங்கள், பரீட்சைத் தேர்ச்சிப் புத்தகங்களின் பிரசுரம், வெகுசனத் தொடர்புச் சாதனங்களில் வெளியிடப்பட்டுவரும் மாதிரி வினாக்களும் விடைகளும் பரீட்சை மையக் கல்விச் சிந்தனையை வலியுறுத்துவதை காணலாம்; மாணவர்கள் பாடசாலைகளில் அதிக அக்கறை காட்டாது ஏட்டுக் கல்விப் பரீட்சைச் சித்தியினை இலக்காக கொண்டு இயக்கப்பட்டு வரும் நிலை உருவாகியுள்ளது. இதன் விளைவுகள் எவ்வாறிருக்கும் எனச் சிந்திக்கும் பொழுது எதிர்கால வாழ்வில் மேலும் பிரச்சனைகள் உருவாகி குழப்பநிலை ஏற்படும் என எதிர்பார்க்கலாம்' கல்வியே சமூக வாழ்வுக்கு வேண்டிய சிறந்த சகதியை தரவல்லது எனக்கருதப்பட்ட நிலை மாறி தராதரப் பத்திரங்களே வாழ்க்கையை தீர்மானிப்பனவாக மாறி வருவதால் பரீட்சை நிலையங்கள் தொடக்கம் பரீட்சைத் திணைக்களம் வரையும் பரீட்சையில் ஆள்மாறாட்டம் செய்வது தொடக்கம் மதிப்பெண்களை மாற்றியமைத்தல் வரை இழிநிலைச் செயற்பாடுகள இடம்பெற்று வருவது கண்கூடாகும். இதனால் வாழ்வுக்கு ஒவ்வாத அறிவு, திறமை, மனப்பாங்கு என்பனவே உருவாகின்றன.

எனவே மனித வாழ்வில் இடம்பெறும் மாற்றங்களையும் மனத்திற் கொண்டு கல்விச் சிந்தனையிலும் செயற்பாட்டிலும் இடம்பெறுவிட்ட வழுக்களை நீக்க வழிவகை கண்டாலன்றி, பிற்சந்ததியாரின அழிவுக்கு வழிவகுத்த குற்றத்துக்கு ஆளாக வேண்டியதாகிவிடும. முழு வளர்ச்சியே கல்வியின் நோக்கம். அதனைச் செயறபடுத்துவதைய்ய கல்விச் செயற்பாட்டில் ஈடுபட்டோர் அனைவரதும இலக்காகக்கருதி செயற்படுத்துவது அவசியமாகும். உடல், உள, மனவெழுச்சிச், சமூக ஒழுக்க, ஆத்மீக வளர்ச்சியினை இலக்காகக் கொண்ட அறிவு, திறமை மனப்பாங்கு தரும் அறிமுறையும் அவற்றை மீள வலியுறுத்தும் செயன்முறையும் இடம்பெற வேண்டிய பாடசாலை வெறும் ஏட்டுக்கல்வித் தராதரப் பத்திரங்களை பெற்றுத்தரும் நிலையங்களாக மாத்திரம் செயற்படுமாயின் இது ஒரு சாபக்கேடென்பது தவறாகாது. ஒன்றிய ஆளுமையை அல்லது சம வளர்ச்சியுள்ள ஆளுமையை உருவாக்கவல்ல பாடவிதானத்தை ஏற்ற முறையில் செயற்படுத்தாது குறுகிய தராதரப் பத்திர நோக்குக்கே செயற்படுத்தும் இழிநிலை மாற வேண்டும். ஏட்டுக் கல்விக்கு நாம்தரும் முக்கியத்துவம் வேண்டாதது. ஆளுமையின் சீரான வளர்ச்சிக்கு ஏற்ற பாடசாலைச் செயற்பாடுகளைப் பாட

விதானத்திற்குப் புறம்பானவை என ஒதுக்கிவிடாது அவற்றை இணைந்த பாடவிதானச் செயற்பாடுகள் எனக்கருதி அவற்றின் முழுமையான பயனை கற்போர் பெற வாய்ப்பும் வசதியும் செய்யப்பட வேண்டும்.

விளையாட்டுப் போட்டிகள், பொருட்காட்சிகள், கல்விச்சுற்றுலாக்கள், சாரணர் இயக்கங்கள், மாணவர் தேர்ச்சியும் பயிற்சியும் பெறும் விவசாயக்கழகம், கலாச்சாரச் சங்கம், தொழிலைப் புகட்டும் அமைப்புக்கள் என்பன புத்துயிரளிக்கப்படுவது அவசியம். மாணவரின் நேரடி அனுபவமே சிறந்த கல்வியெனின் அவர்கள் கூட்டாக ஈடுபடும் பற்பல செயற்பாடுகளும் அவர்களுக்கு வேண்டிய அறிவு, திறமை மனப்பாங்கு என்பவற்றை தருவனவாகும். இன்று இணைந்த பாடச் செயற்பாடுகள் ஒரு சில பாடசாலைகளில் ஒரு சில மாணவருக்கு கிடைக்கலாம். இந்நிலை மாறவேண்டும். எல்லா மாணவருக்கும் வாய்ப்புகள் தரும் வகையில் இச்செயற்பாடுகள் இடம்பெற வேண்டும். இவற்றைச் செயற்படுத்தும் ஆசிரியர் இவற்றின் பயன்களை உணர்ந்து, மாணவரும் பெற்றோரும் உணரச் செய்து செயற்பட வேண்டும். இணைந்த பாடச் செயற்பாடுகள் வெறும் போட்டி நோக்கோடு மேற்கொள்ளப்படாது அவற்றின் அடிப்படை நோக்கத்தினை நிறைவுறுத்த ஈடுபடும் மாணவர் பெறும் அவொழுக்கமே விழுமியங்கள் எனக்கருதி செயற்படுத்த வேண்டும். பாடசாலை நேரத்திலேயே இவை இடம்பெற பாடவிதானம் குறிப்பதால் கற்றலை மகிழ்ச்சியான, தாக்கமான, இலகுவான செயற்பாடாக மாற்றியமைக்கும் நுண்முறைகளைக் கையாண்டு ஆசிரியர் இணைந்த பாடச் செயற்பாடுகளை செயற்படுத்தும் நிலை உருவாக வேண்டும். முழுமையான மனிதரை முழுமையான பாடவிதானமே உருவாக்க வல்லது என்பதனை பாடவிதானச் செயற்பாட்டில் ஈடுபட்டோர் யாவரும் உணர்ந்து செயற்பட வேண்டும்

''மாணவர்கள் ஏதாவது ஒரு நூலை வெறுக்க வேண்டுமானால் அந்த நூலைப் பாட நூலாக்குங்கள்'' — ரூசோ

''பாடசாலை சிந்தித்தும் செயற்பட்டும் வாழும் ஒரு சமூக நிலையம்'' — ஜோண்டுயி

''புலன் அனுபவமே சிறந்த கற்றலின் அடிப்படை''
— மொன்ரசோறி

2

# யாருடைய பொறுப்பு....?

இன்று கல்வியின் பயன் நன்கு உணரப்பட்டு மிக அக்கறையோடு அதனை உலக நாடுகள் திட்டமிட்டு அளித்து வருகின்றன. கல்வியே ஒரு நாட்டின் உண்மையான விருத்திக்கு அடிப்படையாகும் என உணர்ந்து நாட்டு மக்கள் யாவருக்கும் அதனை கட்டாயமாகவும் இலவசமாகவும் வழங்கி வருகின்றன. தமது தேசிய வருமானத்தில் கணிசமான பங்கினைக் கல்விக்காகச் செலவிடுகின்றன. நீண்டகால முதலீடாகக் கருதப்படும் கல்வி, முதலீட்டுக்கேற்ற கருதிய பயன் தராத காரணத்தால் நாடுகள் பலவகைப் பிரச்சனைகளை எதிர்நோக்கி நிற்கின்றன. இப்பிரச்சனைகள் இலங்கை போன்ற வளர்முக நாட்டுக்கு பெரும் சிக்கல்களை உருவாக்கி நாட்டின் வளர்ச்சிக்கு தடையாகி நிற்கின்றன. எனவே கல்விச் செயற்பாட்டினை மீளாய்வு செய்தல் அவசியமாகின்றது. பாடவிதான மாற்றங்களும் நிர்வாகப் புனரமைப்புகளும் கற்பித்தல் ஆகிய செயற்பாடுகளில் புதுப்புது முறைகளைக் கையாள்வதும் நம்நாட்டிலும் இடம்பெறுவதை காணலாம். இவ்வகை நடவடிக்கைகளால் மட்டும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணமுடியாது; கல்விக்கேற்ற சூழலை உருவாக்குவதில் மிகச் செல்வாக்குள்ள பெற்றோர்களும் பிள்ளைகளின் கல்வி விருத்திக்கு ஆக்கபூர்வமான வழிகளில் சிறப்பாக செயலாற்றுவது அவசியமாகும். கல்விச் செயற்பாடு ஒரு கூட்டுப்பொறுப்பன்றி, இன்று பலர் கருதுவது போல ஆசிரியர்களின் பொறுப்பாக மாத்திரம் இருக்க முடியாது.

வீடே ஒருவனது முதற் பாடசாலை. வீட்டுச்சூழலும் குழந்தை வளர்ப்பு முறையும் பிள்ளையின் பிற்கால விருத்திப் போக்கினை நிர்ணயிப்பதில் பெரும் பங்கு கொள்ளுதல் இயல்பாகும். ஆரம்பகால அனுபவங்கள் தொடர்ந்து செல்வாக்குச் செலுத்துகின்றனவாகையால் பெற்றோர் பிள்ளைகளின் வளர்ப்பு முறையில் பெரும் கவனம் செலுத்துவது அவசியமாகும். பாடசாலை என்னும் முறைசார்ந்த கல்விச் சூழல் "கற்பவை கற்க" உதவுகின்றன. பாடசாலை உருவாக்கும் திட்டமிடப்பட்ட கல்விச் சூழ்நிலையின் தாக்கம் முழுமையாக இடம் பெற வீட்டின் சூழலும் அனுசரணையாக அமைதல் வேண்டும். வீட்டுச் சூழல் சாதகமாக அமையாத விடத்தில் பாதகமாக அமையாதிருப்பது விரும்பத்தக்கது. நம்நாட்டில் பெற்றோர் சிலர் பாடசாலையில் பிள்ளையினைச் சேர்த்து விட்டால் தமது கடமை முடிந்ததாக கருதுகின்றனர். பாடசாலையில் சேர்க்கப்பட்ட பின்பும் வீடு பிள்ளையின் கல்வியில் கவனம் செலுத்த வேண்டிய அவசியத்தை பெற்றோர் உணர்வதில்லை. நற்காலக் கல்வித் தத்துவப்படி மாணவர் வாழ்ந்து கற்க வேண்டும். நேரடி அனுபவமூலம் கற்கும் கல்விதான் நிலையான பயனுள்ளதாகின்றது. எனவே பாடசாலை ஏற்படுத்த முயலும் அனுபவங்களுக்கும் மாணவன் அன்றாடம் பெறும் வாழ்க்கை அனுபவங்களுக்குமிடையில் ஓரளவு இணைப்பு இருக்க வேண்டும். அவ்வாறு அமைவதன் மூலமே பாடசாலைக்கல்வி மீளவலியுறுத்தப்பட்டுக் கல்வியின் பயன் வாழ்க்கையை வளம்படுத்த முடிகிறது. பரீட்சையே கல்வி இலக்காக கருதி செயற்பட வேண்டுமென விரும்புவதும், வாழ்க்கை எவ்வாறாயினும் அமையட்டும் பாடசாலையில் படிக்க வேண்டியதைப் படித்தால் போதும் எனக்கருதுவதும் இன்று நாம் சமூகத்தில் காணும் பல பிரச்சனைகளுக்கு வித்தாகின்றன. கல்விக்கும் ஒருவனது வாழ்வுக்கும் தொடர்பின்றிக் கற்ற தத்துவங்கள் வாழ்க்கையில் செயற்படாது. அவை வெறும் ஏட்டுச் சுரைக்காய்களாக தொடர்ந்து இருப்பதால் கல்வியால் சமூகம் பயன் பெறாது போகின்றது. ''பாடசாலையைத் திற சிறைச்சாலைகளை மூடு'' என்னும் முதுமொழி இன்று பொருளற்று விட்டது. எங்கும் எதிலும் ஓர் குழப்ப நிலையினை முதியோர் கண்டு சலித்துக் கொள்வது சாதாரண நிகழ்ச்சியாயிற்று.

இந்நிலை தொடருவது வாழ்க்கைப் பயனை அடையாது வாழும் துன்பநிலையினைத் தொடர்வதாகும். எனவே பெற்றோர் கல்விப் பிரச்சனை அணுகுமுறை சீர்பட வேண்டும். அதன் மூலம் இன்று சமூகத்தை நலிவுறுத்தும் பிரச்சனைகள் பல ஓரளவு தீர வழி பிறக்கும் முதலில் பெற்றோர் கல்விச் செயல்முறையில் தமக்குள்ள பெரும் பொறுப்பினை உணர்தல் அவசியம். அவர்கள் தொடர்ந்தும் ஏனோதானோ என்று இருப்பதுவும் அளவுக்கு மிஞ்சு தலை

யிடுவதும் தவிர்க்கப்படல் வேண்டும். ரூசோ என்னும் கல்வித் தத்துவ ஞானி " தன் பிள்ளையின் கல்விக்கு ஆவன செய்ய முடியாத வனுக்கு தந்தையாகும் உரிமை இல்லை " எனச் சுருக்கமாக கூறிப் போந்தார் இவரது கருத்துப்படி பிள்ளையின் கல்வி விருத்திக்கு தொடர்ந்து பெற்றோர் உதவ வேண்டிய வகையில் உதவ வேண்டும் என்பதாகும். எமக்கென்ன என்று இருப்பதுவும் ஆசிரியர்க்கென்ன தெரியும் என அளவுக்கு மிகுந்து தலையிடுவதும் தவிர்க்கப்பட்டு வேண்டிய அளவில் உதவி அமைவது பெரும் பயன் தருவதாகும்.

" செய்தக்க அல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யா மை யாறுங் கெடும் "

என்னும் தமிழ்மறையாம் திருக்குறள் கூறுவதற்கொப்பச் செய்ய வேண்டியதை செய்யாமையாலும் செய்யக் கூடாததைச் செய்வ தாலும் காரியம் கெடும் என்பதனை எண்ணி நடத்தல் கல்விக்கு உதவுவதாகும்.

பிள்ளைகள் கல்வியில் முன்னேற வேண்டும் என்னும் ஆவல் இயல்பாக எல்லாப் பெற்றோரிடமும் இன்று பரவலாகக் காணப் படுகின்றது. ஆனால் பலர் தாம் வீட்டில் ஏற்படுத்தும் சூழல் அவர் விரும்பும் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்கு எதிரிடையா னது என்ற உணர்வின்றி நடந்து கொள்ளக் காண்கிறோம். பிள்ளை கள் ஒழுக்கக்கேடுறவும் கல்வியில் பின்தங்கவும் காரணமாவதற்குப் பெற்றோரின் நடத்தை காரணமாவதுண்டு. பொய் பேச, நேர்மை தவற, ஏமாற்ற, பெரியோரை அவமதிக்க, ஆசிரியரைக் கேலிசெய்ய, கல்வியின் விழுமியங்களை உதாசீனம் செய்ய நேரடியாயும் மறை முகமாகவும் பெற்றோர் வழிகாட்டுகின்றனர். பாடசாலை ஒன்றே இன்று " அறக்காட்சிச்சாலையாக " அமைய வேண்டும் என விரும்பு கிறாரன்றி வீடு எப்படியும் இருக்கலாம் அதனாலென்ன என்று எண்ணி நடந்து கொள்கின்றனர். பாடசாலையில் கற்றதை வாழ்ந்து பயன் காணப் பிள்ளைகளுக்கு ஏற்ற சூழல் வீட்டிலோ சமூகத்திலோ ஏற் படுவதில்லை. வீடும் சமூகமும் தொடர்ந்து முதியோர் மையமாக அமைந்து காணப்பட பாடசாலை ஒன்றே மாணவ மையமாக அமைய வேண்டும் என விரும்புதல் பயன்தருமோ? பிள்ளைகள் தம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும் எனப் பெற்றோர் விரும்பும் விழுமியங் களை முதலில் பெற்றோர் கடைப்பிடிப்பதுவே சிறந்த கல்விச் சூழ லாகும். இது பிள்ளைகளின் கல்வி விருத்தியில் அக்கறையுள்ள பெற் றோர்களின் தலையாய கடனாகும். இன்னும் சில பெற்றோர் தமது அபிலாசைகளை நிறைவுறுத்தும் கருவிகளாக பிள்ளைகளை பயன் படுத்தும் பரிதாப நிலையினை இன்று பரக்கக் காணமுடிகிறது;

இயல்பாகவே அமையும் உள்ளார்ந்த திறனும் நாட்டமும் இல்லாத துறைகளில் பிள்ளைகள் முன்னேற வேண்டும் என்னும் பேரார்வத்தால் பெற்றோர் முதிர்ச்சிபெறாத நிலையில் அதிக பயிற்சி தர முனைவதுவும் நாட்டமில்லாத் துறையில் தூண்டுவதும் பிள்ளைகளின் நெறிபிறழ்ந்த நிலைக்கு காரணமாகிவிடக் காணலாம். தம்மை அறியாமலேயே தமது பிள்ளைகளின் கல்விக்கு பற்பல தடைகளை ஏற்படுத்திவிட்டு ஆசிரிய உலகத்தை அவதூறு கூறுதல் நீதியாகுமா?

ஆசிரியரின் செயற்றிறன் அவர்கள் பெறும் ஒத்துழைப்பிலும் மதிப்பிலும் ஓரளவுக்குத் தங்கியுள்ளது. ஆசிரியரது சமூக பொருளாதார நிலை குன்றியமையும் அவர்களது சோர்வுக்கு காரணமாகும். ஆசிரியருக்கு நல்ல வாழ்க்கைச் சூழலை ஏற்படுத்தல் சமூகத்தின் தலையாய கடனாக கருதப்படல் வேண்டும். எனவே அரசும் சமூகமும் இவ்வகையில் செயற்படுவது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்துக்கு வழி செய்யும். ஆசிரிய நியமனம், பயிற்சி, இடமாற்றம், பதவி உயர்வு என்பவற்றில் வேண்டாத அரசியல்வாதிகளின் தலையீடு தவிர்க்கப்பட்டுத் தேசிய நோக்கில் கண்ணியமான முறைகளை கடைப்பிடித்தல் நாட்டின் கல்வி முன்னேற்றத்துக்கு உதவுவதாகும்.

பிள்ளைகளின் கல்வியில தொடர்பு கொண்ட ஆசிரியரும் பெற்றோரும் பரஸ்பர விளக்கம் பெற நெருங்கிய தொடர்புடையவராயிருத்தல் அவசியம். இத்தொடர்பினை நன்குணர்ந்தே பாடசாலை முன்னேற்றச் சங்கங்கள் இன்று உருவாக்கப்பட்டுள்ளன. இவை கருதிய பயன்தரப் பெற்றோரும் நலன்நாடிய மாணவனது சமூகச் சூழலிலுள்ள கல்விச்சான்றோரும் பங்கு கொண்டு ஆசிரியரின் செயற்பாட்டுக்கு ஆக்கமும் ஊக்கமும் தருதல் வேண்டும். தொடர்பின்மையும் சரியான தகவல்களின்மையும், வதந்திகளையும், சந்தேகங்களையும் உருவாக்குவனவாகும். எனவே ஆசிரியரும் பெற்றோரும் வேண்டிய அளவுக்கு நெருங்கிய தொடர்புற்றிருப்பது பல வகையில் மாணவனது கல்வி முன்னேற்றத்துக்கு உதவும் என்பது உறுதி.

" இவன் தந்தை என்னோற்றான் கொல் " என்றும்

" சான்றோன் " எனச் சமூகம் பிள்ளையைப் போற்றவும் காணவிழையும் பெற்றோர். அவர்கள் கல்வி விருத்திக்கு ஒல்லும் வகையெல்லாம் உதவுதல் வேண்டும். ஆசிரியர்களை அடுத்துக் கல்விச் செயற்பாட்டில் ஏற்படும் மாற்றங்களை அறிந்து அதற்கேற்ற வகையில் கல்வி விருத்திக்கு உதவும் சூழலை வீட்டிலும் அமைத்துத்தர முன்வர வேண்டும். ஈன்று புறந்தருவதோடு கடனம் முடியவில்லை,

அவனைச் சான்றோனாக்கும் பணியிலும் பெரும்பங்குண்டு என்பதனைப் பெற்றோர் உணர்ந்து செயற்படத் தொடங்கின் நல்ல கல்விச் சூழல் ஏற்பட்டு அது கேடில் விழுச் செல்வமாய் நிலைத்த பயன் தந்து மண்ணில் நல்(ல) வண்ணம் வாழ வழியேற்படுவது உறுதியாகும்.

## ஆசிரிய நண்ப,

அன்பு செய்திடின் இன்ப அழகைக் காண்பாய்
ஆதாரம் அவர்களுக்கு நீயே ஆவாய்
இன் சொல்லே பேசிக் கல்விக் காவாய்
ஈர்த்தறிவுத் தேன் வழங்கி வாழக் காண்பாய்
உள்ளநிலை நன்குணர்ந்து உதவவேண்டும்
ஊக்கமே உயிராய் நீ உழைக்க வேண்டும்
எல்வோரும் கற்றிடலாம் என்பதுண்மை
ஏன் இவர்கள் கற்பதில்லை என்றே எண்ணி
ஐயங்கள் தீர்ப்பதற்கு ஆய்ந்தே என்றும்
ஒளியாக வாழ்ந்து நீ உலகம் உய்ய
ஓயாது அவர்க்குதவ நீ விழைவாயானால்
ஔடதமாய் உனை உலகு வணங்கும் வாழி;

# 3

# சமுதாய வளர்ச்சியில் ஆசிரியர் பங்கு.....

ஒரு சமூகத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு கொள்வோர் அச் சமூகத்தில் அறிவும், திறமையும், சமூக மனப்பாங்கும் கொண்ட தொண்டர்களே. "பண்புடையார் பண்டும் உலகம்" என வள்ளுவப் பெருமானாரால் வியந்துரைக்கப்பட்ட பண்பாளரே சமூக வளர்ச்சிக்கு முன்னோடிகளாவார். இம்முன்னோடிகள் காட்டிய வழியைப் பின்பற்றி ஏனையோர் பெரும்பாலும் ஒழுகுவதின் மூலம் சமூகம் வளர்ச்சி உறுவது இயல்பு. சேவை மனப்பாங்கும் திறமையும் உள்ள அறிவாளிகள் எவ்வகையில் சமூகம் முன்னேற வேண்டுமென்பதை பெரும்பாலும் தீர்மானிப்பார்கள். அவர்களே சமூகத்தின் கலங்கரை விளக்குகள் மெய்வருத்தம் பாராது பசி நோக்காது கண் துஞ்சாது இவ்விழுமியோர் பொது நலன் கருதிச் செய்யும் சேவையின் பெறுபேறாகச் சமூகத்தில் வளர்ச்சி ஏற்படுவதை மனித சமூக வரலாற்றில் பரக்கக் காணலாம். இச்சிரிய சேவையாளர்களுள் ஆசிரியர்கள் முதன்மை வகிக்கின்றனர். ஆசிரியரின் போதனையும் உதாரண வாழ்க்கையும் சமூக வளர்ச்சியில் ஒப்பற்ற பங்காகும் என்பது காய்தலுவர்த்தலின்றி நோக்கும் எவருக்கும் தெளிவாகும்.

கிரேக்க சமூக வளர்ச்சிக்கும் அச்சமூகத்தில் தோன்றிய பேராசிரியர்களாகிய சோக்கிறற்றீஸ், பிளேற்ரோ, அரிஸ்ரோட்டில் என்போர் காரணர் ஆயினர். வால்மீகி, வியாசகர், வள்ளுவர், கம்பர்

போன்ற பேராசிரியர் பரந்த சமூகத்தைத் தமது போதனைக் களமாகக் கொண்டு ஒழுகியதால் சமூகத்தில் பலவகை வளர்ச்சி ஏற்படக் காரணமாயினர். கல்வியின் மறுமலர்ச்சிக்கும் மதசீர்திருத்தத்திற்கும் சிறந்த போதகர் தொண்டாற்றினர். பிரான்சிய புரட்சி சமூக வளர்ச்சியின் ஒப்பற்ற சாதனை இதனைச் சாதகமாக்கியதில் பெரும் பங்கு வகித்தவர் றூசோ, வரல்லயர், மொன்ரேஸ்கியூ என்னும் சிந்தனைச் செம்மல்களாகிய ஆசிரியறன்றோ; இவ்வாறு சமூக வளர்ச்சியில் பண்டு தொட்டு ஆசிரிய பெருமக்கள் பங்கு கொண்ட வரலாற்றினை எண்ணும்போது அன்றைய ஆசிரியரைவிட இன்றைய ஆசிரியருக்குச் சாதகமான சூழல் அதிகம் என்றே கூறலாம். கல்வி நோக்கும் போக்குமுள்ளதாய், முறையணைந்ததாய், கட்டாய மானதாய், இலவசமானதாய் ஆரம்ப நிலையிலாயினும் இடம் பெறுவதால் இன்று ஆசிரியர்களின் தொண்டு சமூக வளர்ச்சியில் மிகப் பெரிய தாக்கத்தைச் செலுத்தத் தவறுவதில்லை. இதனைக் கருத்திற் கொண்டே சமூகத்தின பல துறைவளர்ச்சிக்கும் கல்வியே அருமருந்து ஆசிரியனே அடிப்படை ஆசான் என்று யப்பான், இஸ்ரேல் ருசியா போன்ற நாடுகள் மதித்துச் செயற்பட்டு வெற்றி கண்டுள்ளன. இன்று வளர்ச்சியடைந்துவரும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளெல்லாம் ஆசிரியனே சமூக வளர்ச்சியில் பெரும் பங்கு கொள்ள வேண்டும் எனத்துணிந்து கல்விச் செலவைப பெறும் மூலதனம் எனக்கருதிச் செயல்படுத்தி வருகின்றன.

இலங்கை வரலாறும் இக்கருத்தை வலியுறுத்துகின்றது. இன்று நம் சமூகத்தில் காணப்படும் குறைபாட்டுக்குக் கல்வியைத் திட்டமிடுவதன் மூலம் தீர்வு காண விளைந்துள்ளோம். பாடசாலையைத்திற சிறைச்சாலையை மூடு என்பது முதுமொழி பாடசாலையின் தொழிற்பாடு ஆசிரியனில் தங்கியிருக்கின்றது. இவ்வாசிரியனின் தொண்டால் சிறைச்சாலைகள் மூடப்படும் அளவுக்குசமூகம் வளர்ச்சியுற வழியுண்டு என்பதனை இம்முதுமொழி வலியுறுத்துகின்றது. பெருங்காலச் சந்ததியினருக்கு நல்ல வழிகாட்டல் வேண்டும். வித்துக்கு நல்ல வளரும் சூழலை ஏற்படுத்தின் அஃது வளரும். அதேபோன்று இன்றைய மாணவருக்கு வளர்ச்சிக்கேற்ற நல்ல சூழல் ஆசிரியனிடமிருந்தே பெருமளவு பகுதியும் வரவேண்டும். ஏனெனில் ஆசிரியன் ஒருவனே திடமான இலக்கினைக் கொண்ட திடமான கட்டுப்பாட்டுடன் சூழ்நிலையை உருவாக்கும் பொறுப்பை பெற்றுள்ளவன் எனவே சமூக வளர்ச்சியில் ஆசிரியனின் தொணடே இன்றியமையாத அடிப்படைத்தேவை என்பது தெளிவாகும்.

இவ்வுயரிய நிலையில் உள்ள ஆசிரியன் தனது பெரும் பொறுப்பை உணரவேண்டும். மகத்தான சேவையின் தாக்கத்தை உணரும் ஆசிரியன் சிறுமை களைந்து செயற்கரிய செய்து சமூகத்தொண்டினை வெற்றியாக்க முடியும் ஒரு ஆசிரியனின் சேவையினை இரு கூறுகளாகப் பிரிக்கலாம். ஒன்று முறையணைந்த சேவை மற்றயது முறையணையாச் சேவை முறையணைந்த சேவையில் ஆசிரியன் கடமையை இரு பெரும் கூறுகளாகப் பிரிக்கலாம். ஒரு பிரிவில் போதனை சமூகவியல் பினராக்கல், மதிப்பிடல் ஆகியவை அடங்கும் அடுத்த பிரிவில் ஊக்குவித்தல், கட்டுப்பாட்டை நிலைநாட்டல் கற்றலுக்குரிய சூழ்நிலையை உருவாக்கல் எனலாம், இம்முறையணைந்த சேவையில் ஆசிரியன் மாணவர்களிடத்தே ஏற்படுத்தும் அறிவு திறமை மனப்பாங்கு என்பன சமூக வளர்ச்சிக்கு அதிக அளவில் உதவுவதாகும் பாடசாலை என்பது ஒரு சிறிய அளவிலான சமூகம் என்பது யோன்டூயியின் கூற்று. இச்சிறிய அளவிலான பாடசாலையில் ஆசிரியன் தான் பெற்றுள்ள கட்டுப்பாடான சூழ்நிலையில் செய்யும் சேவை சமூக வளர்ச்சிக்குரியதாகும். சமூக மையக்கல்வியே இன்று பாடசாலைகளின் நோக்கு சமூக வளர்ச்சிக்கு வேண்டிய அறிவு திறமை மனப்பாங்கு என்பவற்றை ஏற்படுத்துவதன் மூலம் ஆசிரியன் சமூக வளர்ச்சியில் பெரும் பங்கு கொள்கிறன். பாடசாலையில் ஆசிரியன் பலநிலைகளிலிருந்து தனது தொண்டினைச் செய்கிறன்.

"ஒரு சமூகத்தின் தலைசிறந்த செல்வம் நல்லாசிரியனே"

ஆசிரியன் ஓர் சமூகத்தின் பிரதிநிதி, நீதிபதி, அறிவினதும் திறமையினதும் பிறப்பிடம், துணைவன், நடுவன், துப்பறிவோன் உதாரணகுணத்தோன், குழுத்தலைவன், நண்பன் எனப்பல பாத்திரங்களாக ஆசிரியன் தொழிற்படுவதால் வருங்காலச் சந்ததியினர் சிக்கலில்லாச் சமூக வாழ்வைப் பெற்று மகிழ வழி செய்கிறான். சமூகத்தில் காணப்படும் சீர்கேடுகள் சட்டத்தின் மூலம் களையப்படுவதைவிட மக்களிடையே விளக்கமான அறிவின் அடிப்படையில் ஏற்படுத்தப்படும் மனப்பாங்கின் பெறுபேறாக ஏற்படும் பண்புகளே சிறந்தவையும் நிலையானவையுமாகும். சமூகத்தில் இன்று பல்வகைப்பட்ட அறிவு நல்வாழ்வுக்கு அவசியமாயிருக்கிறது. நிகழ்கால அறிவு மாத்திரமன்று எதிர்காலத்தில் வேண்டப்படும் அறிவும் உடையவனாய், ஆசிரியன் இருப்பதன் மூலம் சமூக வளர்ச்சிக்கும் ஏற்ற சூழலை ஆக்கப் பாடசாலை என்னும் ஆய்வு கூடத்தை அவன் பயன்படுத்த முடியும். சமூகப்பிரச்சனைகள் பற்றிய முறையான அறிவு வேண்டும். அவற்றின் துணைக்கொண்டு பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும் வேண்டிய சூழலை ஏற்படுத்தும் தனது திறமையைப் பிர

யோகித்து இளைஞரிடம் சமூக மனப்பாங்கு ஏற்பட வழி செய்ய லாம். உதாரணமாக சமூகத்தில் ஏற்றத்தாழ்வு பல பிரச்சனை களைத் தோற்றுவிப்பதாம் சமூகதத்துவ மனப்பாங்கு பாடசாலையில் மாணவரிடை ஏற்படுத்தக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத் தலாம்; மாணவரின் முழு வளர்ச்சியும் இன்று ஆசிரியனது கடமை யாகும்: எனவே பட்சபாதமற்று சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் ஆசிரியன் எல்லா மாணவருக்கும் மதிப்பளித்து அவரிடம் ஊடாட்டம் ஏற்பட வகுப்பறையினைப் பயன்படுத்த வேண்டும். கூடி வாழ்தல், சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல் முதலிய சமூகப்பண்புகள் மாணவரிடம் தோற்றுவிக்கப்படின்; இது இலகுவில் சமூக வளர்ச்சிக்கு உதவும். எனவே பாடசாலைப் பாடத்திட்ட வேலையி னையும் பாடத்திட்டத்தோடு இணைத்து விளையாட்டு, மாணவர் தேர்ச்சிச் சங்கம், மாணவர் இயக்கம் போன்ற நல்ல சூழ்நிலைகளை யும் ஆசிரியன் திறமையோடு கையாள்வதன் மூலம் சமூகவளர்ச்சிக் குப் பெரிதும் உதவலாம். "பாடசாலை ஒரு அறக்காட்சிச்சாலை" என்பதே பலரின் கருத்து இவ்வறச் செயல்கள் வாழ்வுக்கு ஏற்ற வகை யில் வளர்க்கப்படின் சமூகம் கல்விக்காகச் செலவிடும் பெருந் தொகைப் பணத்தால் பன்மடங்கு பயன் பெறும் என்பது அறிஞ ரின் துணிவு.

சமூகத்துக்கு ஆசிரியன் செய்யும் சேவை பாடசாலை என்னும் ஒழுங்கு செய்யப்பட்ட கல்விச்சூழலோடு நின்று விடுவதில்லை. பரந்த சமூகத்திலும் சேவை வேண்டப்படுகிறது; பல கிராமங்களில் ஆசிரி யர் மாத்திரமே கற்றவராய், பண்பாளராய், தொண்டராய் எனது விடயங்களில் செயற்பட வேண்டிய நிலையுண்டு. இதனை ஆசிரிய னது முறையனையாச் சேவை எனலாம். பாடசாலையில் அவன் அளிக்க விரும்பும் அறிவு திறமை, மனப்பாங்கு என்பவை நிலை பெறப் பாடசாலைக்கு வெளியிலும் தனது உதாரண நடத்தையால் சேவை செய்ய வேண்டும். மாணவருக்கும் ஆசிரியனுக்கும் உள்ள தொடர்பு பாடசாலை எல்லைக்குள் மாத்திரமே கட்டுப்பட்டதன்று. சமூகத்திலும் மாணவரோடும் பெற்றோரோடும் ஏனையோரோடும் ஆசிரியன் தொடர்புற்றிருப்பது அவனது சேவை தாக்கமுற உதவும். சமூகத்தில் பல துறைகளில் ஆசிரியனின் சேவை தேவைப்படுகிறது. அத்துறைகளிலெல்லாம் அவன் தயக்கமின்றிப் பங்கு கொள்ள வேண் டும். கிராம முன்னேற்றச் சங்கங்கள், விளையாட்டுச் சங்கங்கள், கிரா மச் சங்கங்கள், சமயச்சங்கங்கள் என்பவற்றில் ஆசிரியன் பங்கு கொள் வதன் மூலம் தனது அறிவையும் திறமையையும் சமூக வளர்ச்சிக்கு பயன்படுத்தலாம். ஏனையோரைவிட ஆசிரியனிடம் நீதியையும் நேர் மையையும் சமூகம் எதிர்பார்த்து அவனுக்கு மதிப்புக் கொடுக்கிறது;

ஆசிரியனது அறிவுரைக்கு இளைஞரும். முதியவரும் ஒருசேரச் செவி சாய்த்து நடப்பர். எனவே ஆசிரியன் முறையணையாச் சேவைக்கள மாகப் பரந்த சமூகத்தைப் பயன்படுத்துவது சமூக வளர்ச்சிக்குப் பெரும் உதவியாகும்.

புதிய கல்வித்திட்டம் சமூக வளர்ச்சியை இலக்காகக் கொண்டது. அது நன்கு செயற்படுத்தப்படின் இன்று சமூகத்தில் காணப்படும் பல குறைகள் தீரும். உடல்வளர்ச்சி, உளவளர்ச்சி, ஆத்மீகவளர்ச்சி, சமூகவளர்ச்சி எல்லாமே புதிய கல்வித் திட்டத்தை செயற்படுத்தும் ஆசிரியன் உண்மையான சமூகத்தொண்டு மனப்பாங்கோடு செயற் படவேண்டும். பல அரிய திட்டங்கள் கருத்தமைய பயன்தரத்தவறிய தற்குக் காரணம், அவற்றைச் செயற்படுத்துவோரின் வேண்டிய அக் கறையின்றிக் கூலிக்கு மாரடித்ததே. உதாரணமாகக் காந்தியின் ஆதாரக் கல்வித்திட்டம் பரந்து பயன்தராதது செயற்படுத்துவோரின் அக்கறையற்ற நடத்தையால் நம் நாட்டின் தேவைகளை நம் நாட்டு இயற்கை வளங்களையும், மனித வலுவையும் பயன்படுத்தி நிறைவு செய்யப் புதிய கல்வித்திட்டம் அடிகோலுகின்றது. ஏற்றத்தாழ்வின்றி போட்டி பூசலின்றி பசி பட்டினி இன்றி மக்கள் தம் நிறைவுப் பேறுபெற்று வாழும் ஓர் சர்வோதைய சமூகம் உருவாக வேண்டில் பொருளாதாரச் சுதந்திரம் வேண்டும். சகோதரத்துவம், சமத்துவம் சகிப்புத்தன்மை, தொழில் மகத்துவம் யாவும் மதிக்கப்படவேண்டும். இப்புதிய சமூகச் சூழலை ஏற்படுத்தும் சேவையின் பெரும்பங்கு, கொள்ள வேண்டிய பங்கு ஆசிரியனுடையதே. இதனை தமது தொழில் மகத்துவத்தை உணர்ந்தவராய் பாடசாலையின் அகத்தும் புறத்தும் ஆசிரியர் என் கடன் சமூகப்பணி செய்து கிடப்பதே எனக் கருதி, தன்மனம், வாக்குக் காயத்தால் சேவைசெய்யின் நாம் விரும் பும் சமூகவளர்ச்சி கிட்டும் என்பதில் சந்தேகமில்லை.

---

***மனிதன் தன்*** சூழலைக் கற்றுக்கொள்ள மேற்கொள்ளும் ஆர் **வம் பாராட்டற்குரியது**. ஆனால் அவன் தன்னைப்பற்றி அதிகம் **கற்றுக்கொள்ளா**ததால் அல்லல்ப்படுவதுதான் வேதனைக்குரியது.

# 4

# ஆசிரியரின் சிந்தனைக்கும் செயற்பாட்டிற்கும் ..........

ஆசிரிய வாண்மையின் பயன் மாணவர் சிறப்பாக கற்க உதவு தல் கற்றல் என்பது கற்றபடி நிற்றலையும் உள்ளடக்குவதாகும் கற்றபடி நிற்போரையே கற்றார் என மதிப்பர். கல்வி பெரிதும் விருத்தி அடைந்ததாக கூறப்படும் நாடுகளிலும் கல்விக்கும் வாழ்வுக் கும் தொடர்பில்லாத நிலை காணப்படுகின்றது. துரிதபொருளாதார முன்னேற்றம் காணவேண்டும் எனத்துடிக்கும் வளர்முகநாடுகள் பலவும், வெறும் ஏட்டுக்கல்வியை பரீட்சை இலக்குடன் வழங்குவ தால் "வாழக்கல்வி" எனும் நிலை காணப்படுவ தில்லை- சில வளர்முக நாடுகளில் பொருத்தமற்ற கல்வியால் அரசியல் சமூகப் பொருளாதாரப் பிரச்சனைகள் கவலை தரும் அளவுக்குப் பெரிதாகி உள்ளன. இந்நிகழ்வுக்கு இலங்கையின் கல்வி வரலாறு நல்ல உதாரண மாகும்.

உயர்ந்த பொருளாதார விருத்தி இலக்கினை அடைய விஞ்ஞான தொழில் நுட்பக் கல்விக்கு முன்னுரிமை தரும் நாடுகளில் மனித தத்துவ விருத்தி உதாசீனம் செய்யப்படுவதால் சமூகத்தில் பல் வேறு பிரச்சனைகள் தோன்றக்கூடும். கல்வி விருத்தியினால் தனது பிரச்சனைகளுக்கெல்லாம் தீர்வுகாணலாம் என எதிர்பார்த்த மனிதன் ஏமாற்றமடைந்தவனாய் விரத்தி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளான்.

"அணுவைப் பிளந்தாயிற்று ;
அண்டத்தை அளந்தாயிற்று ;
ஆனால், மனிதன் மனிதப்பண்பை
இழந்தாயிற்று"

என மனிதன் தவிக்கும் நிலையினைக் காண்கிறோம். வாழ கல்வி வகைசெய்யவில்லை. வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி செய்ய வேண்டிய கல்வி, மனித வாழ்வை குளிக்கப்போய் சேறு பூசிக் கொண்ட நிலைக்கு ஆக்கியுள்ளது.

இவற்றை எல்லாம் கருத்திற் கொள்ளும் பொழுது காலதாமத மின்றி கல்விக் கோட்பாட்டிலும் செயற்பாட்டிலும் மாற்றம் செய்யப் படவேண்டும், என்னும் முடிவுக்கே வருகின்றோம். கல்வியின் மூலம் மனித நடத்தை பண்படுத்தப்பட வேண்டிய தேவை என்றுமில்லாத அளவுக்கு இன்று உணரப்படுகின்றது. விஞ்ஞான விருத்தியால் உலகை ஆட்டிப்படைக்கும் செல்வ நாடுகள், தமது ஆதிக்க வேட்கையால் அழிவை ஆயுதமாகக் கொண்டு மனித குலத்தையே அச்சுறுத்தும் நிலையைக் காண்கிறோம். "உலகப் போர் மனித உள்ளத்திலேயே ஆரம்பிக்கின்றது" மனித உள்ளத்தை மாசற்றதாக்கி "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் கொள்கைப்படி மனித வாழ்வு உருவாகக் கல்வி உதவ வேண்டும். வேதனையும் சோதனையும் மிகுந்த இன்றைய நிலையினை மாற்றியமைக்கக் கல்வியினைப் பயன்படுத்துவதே அறிவுடைமை. கல்வியால் அறிவு ஒளியுடையதாக்கப்பட்டு மனிதத்துவத்தை மதிக்கும் அன்பும் பண்பும் விஞ்ஞான தொழில் நுட்ப விருத்தியினை நெறிப்படுத்தி, மனிதன் மனிதனாக வாழ கல்வியை வழங்க விரைவில் இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் கல்வியின் நோக்கும் போக்கும் மாற்றி அமைக்கப்படுவது இன்றியமையாததாகும்.

கல்வி என்பது வளர்முக நாடுகளில் பரீட்சை என்னும் பந்தய ஓட்டமாகவே அமைந்துள்ளமை வேதனை தருவதாகும். உயர்ந்த தராதரப் பத்திரத்தினை பெறும் நோக்குடன் கற்போர் ஓய்வில்லாது கற்றலில் தம்மை ஈடுபடுத்த வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றனர். பிள்ளைகளின் ஏட்டுக்கல்வி முன்னேற்றம் குறித்த பெற்றோரின் அபிலாசை செறிந்த அழுத்தத்தால், பிள்ளைகள் தங்கள் உள்ளார்ந்த இயல்புக்கேற்ற விருத்தியினைப் பெறமுடியாது போகின்றது. அவர்களது திறன்கள், தேவைகள், உந்தல்கள், அபிலாசைகள் எல்லாமே நசுக்கப்படுகின்றன. அவர்கள் பெறும் வெறும் ஏட்டுக்கல்வித் தராதரப் பத்திரங்கள் அவர்கள் வாழப்பயன்படாது

போய்விடும் பொழுது தாம் கற்ற கல்வியிலும் அக்கல்வியை தம்மீது திணித்த சமூகத்திலும் வெறுப்படைவது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது.

இலங்கையில் அண்மைக்காலத்தில் இளைஞரிடம் பரவலாக காணப்படும் அமைதியின்மை, விரக்திநிலை, சமூக எதிர்ப்புப் போக்கு என்பவற்றுக்குரிய காரணங்களை இனங்கண்டு அவர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும் வழிவகைகளை கண்டறிய 1990 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட சனாதிபதி விசாரணைக்குழு, அதன் அறிக்கையில் இளைஞர் பிரச்சனைகளுக்கு முக்கியகாரணமாக அவர்களுக்கு வழங்கப்பட்ட பொருத்தமற்ற ஏட்டுக்கல்வியையே சுட்டிக் காட்டியுள்ளது. கல்விக் கோட்பாட்டையும் செயற்பாட்டையும் "வாழ்க்கல்வி" என்னும் நோக்கில் மறுசீரமைப்பதே இளைஞர் பிரச்சனைகளுக்கு தீர்வுதரும் என்னும் கருத்தை விசாரணைக் குழுவினர் எடுத்துக் கூறியமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறு மறுசீரமைக்கும் பொழுது மாணவரின் இயல்பு, நாட்டின் தேவை, நாட்டின் பண்பாட்டுப் பாரம்பரியம், பொருளாதார நிலை என்பவை கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. வாழப் பயன் தரும் கல்வியை அறிமுறை மூலமும் செய்முறை மூலமும் சமவிருத்தி பெற்ற ஒன்றிய ஆளுமை உடையவராக உருவாக்குவதற்கு கல்வி திட்டமிட்டு வழங்கப்பட வேண்டும் என்பதே ஆணைக் குழுவின் விதப்புரையின் சாரம் எனக்கொள்ளலாம்.

பிள்ளைகள் தமக்கும் சமூகத்துக்கும் அதி உச்சப் பயன்தரும் வகையில் உருவாக்கப்படுவது அவசியமாகும். திட்டமிட்டுப் பிள்ளைகளின் அறிவு, திறமை, மனப்பாங்கை விருத்தி செய்யக்கூடிய தகுதி முறைசார்ந்த கல்வி நிலையங்களாகிய பாடசாலைகளுக்கே உள்ளது. பாடசாலைகள் வழங்கும் கல்விச் சூழலின் தன்மைக்கேற்பவே கல்விப் பயன் அமையும். மரபும் சூழலுமே ஒருவரது ஆளுமை உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணிகள் ஆளுமையை மதிப்பிட ஒருவரின் பெற்றோரையும் அவர் கற்ற பாடசாலையையும் அறிய முற்படுகின்றோம், ஆசிரிய வாண்மையின் சிறப்பே பாடசாலை வழங்கும் கல்விச் சூழலின் சிறப்பாகும் தராதரப் பத்திரம் மாத்திரம் ஒருவரின் நிறைவான வாழ்வுக்கு உத்தரவாதமாகாது. பரீட்சை நோக்கில் பெற்ற தராதரப்பத்திரம் வாழத்திறமை வழங்குவது சாத்தியமில்லை. கல்வியின் பயன் வாழ்வே. பட்டங்கள் பல பெற்றும் அவற்றின் அடிப்படையில் பதவிகள் பெற்றும் சிலர் மனிதப்பண்பு இல்லாராய் தாம் வேதனைப்படுவதும் பிறரை வேதனைப் படுத்துவதும் நிகழக்காண்பது பரீட்சையைக் கல்வியின் விளைவே.

கல்விச் செயற்பாட்டின் கவலைக்குரிய விளைவுகளை மாற்றி அமைத்து இன்று நாம் எதிர்கொள்ளும் முக்கிய வாழ்க்கைப் பிரச்சனைக்கு தீர்வுதரக் கல்வி வழங்குவது இன்று ஆசிரிய வாண்மைக்கு சவாலாய் அமைவதாகும்.

இலங்கையில் எழுத்தறிவு பெற்றோர் தொகை 86% எனச் சொல்லப் படுகின்றது. இது வளர்முக நாடுகள் பலவற்றுள்ளும் முன்னேற்றமான சாதனை என்றும் பேசப்படுவது குறிப்பிடத்தக்கது. எனினும் எழுத்தறிவு வளர்ச்சியும், ஒன்பது பல்கலைக்கழகங்களால் உயர்கல்வி விருத்தியும், கல்விக்காக செலவிடப்படும் பெருந் தொகைப் பணமும் மக்கள் வாழ்வில் உண்மையான உயர்வைத் தரவில்லை என்ற கசப்பான உண்மையை ஏற்றுக் கொள்ளவும் வேண்டும். கடந்த அரை நூற்றாண்டில் இந்நாட்டில் இடம்பெற்ற கல்வி வரலாற்றைத் திறனாய்வோர் பரீட்சை இலக்குடைய ஏட்டுக்கல்வி தொடாவதுக்குரிய முக்கிய காரணிகளை இனங்காண முடியும். தற்கால இலங்கையின் தேசியக்கல்வியின் தந்தை என மதிக்கப்படத் தக்க கல்வியாளர் கலாநிதி. சி. டபிள்யூ. கன்னங்கரா அவர்கள் தேசிய மொழிகளைப் போதனா மொழிகளாக்கியும், ஆரம்ப நிலையிலிருந்து பல்கலைக்கழகம் வரை கல்வியை இலவசமாக்கியும், அரசே கல்வியை வழங்கும் முழு உரிமையையும் பெற்றிருக்க வேண்டுமென மகா வித்தியாலயங்களையும், மத்திய மகா வித்தியாலயங்களையும் குறிப்பாக கல்வியில் பின்தங்கிய பிரதேசங்களில் அமைத்தும், கல்வி வாய்ப்புக்களைப பரவலாக்க ஆர்வத்தோடு உழைத்தார். அவரது கல்வித்திட்டம் வாழ கல்வி வழங்குவதையே முக்கிய இலக்காக கொண்டிருந்தது. தொழிலும் தொழில் நுட்பமும், விவசாயமும் இடைநிலைக்கல்விக் காலத்தில் மாணவருக்கு வழங்க அவர் வகுத்த திட்டம் கைவிடப்பட்டது. நாட்டுக்குப் பெரும் சாபக்கேடாயிற்று. அதன்பின் வேலை அனுபவம் தொழில் முன்னிலைப் பாடங்களின் மூலம் மாணவர் செய்தும் சிந்தித்தும் கற்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் கைவிடப்பட்டன. வாழ்க்கைத் திறன் கல்வி போதிக்கப்படும் என்னும் வாக்குறுதியும் ஆர்வத்தோடு நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஏட்டுக் கல்வியே கல்வி என்னும் நிலை தொடர்வதையே காண்கிறோம், அதன் விளைவாக நாட்டில் அமைதியின்மையும் அவலமும் மக்களை வருத்துவதை அவதானிக்க முடிகிறது.

ஏட்டுக்கல்வியை மாற்றி அமைத்து வாழக்கல்வி வழங்கக் காலத்துக்கு காலம் எடுத்த நடவடிக்கைகள் தோல்வியடைந்தமைக்கு காரணங்களை கண்டறிவது பயனுள்ளதாகும். எமது கல்வியில் இங்

லொந்துக் கல்விச் சிந்தனையும் செயற்பாடும் இடம்பெறுவதையே படித்த உயர்வகுப்பார் விரும்பினர். உயர் வகுப்பாரின் ஆதிக்கம் தொடர ஒரு சிலருக்கே ஆதிக்கப்பதவி தரத்தக்க ஏட்டுக்கல்வி தொடரப்பட்டது. பெருந்தொகையினர் கல்வியால் பயன்பெற முடியாதமைக்கு ஏட்டுக் கல்வியே காரணம் இப்பிரச்சனை ஆசிரியர்களால் அக்கறையோடு சிந்திக்கப்படவில்லை. ஆசிரிய சங்கங்களும் சமூக முன்னேற்ற அமைப்புக்களும் இப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதில் அதிக அக்கறைப்படுவதில்லை; எனவே தேசியப் பிரச்சனைகள் தீர்வின்றித் தொடர்கின்றன.

" பாடசாலை சமூகத்தின் கரு " அதைத் தக்க முறையில் செயற்படச் செய்து முக்கிய தேசியப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதே அறிவுடைமை. மாணவரின் உளவிருத்திக்கு மட்டுமே ஆசிரியர் பொறுப்பு என்னும் தவறான கருத்தை ஆசிரியர்கள் கைவிட வேண்டும். மாணவரின் முழுவிருத்திக்கும் ஆசிரியர்களே பொறுப்பு என உளப்பூர்வமாக உணர்ந்து அதற்கேற்ப ஆசிரிய வாண்மையை உருவாக்கிச் செயற்படல் இன்று ஆசிரியரிடம் வேண்டப்படுகின்றது. ஆசிரியர்களே சமூக முன்னோடிகள். அவர்கள் முயன்றால் நாடு கல்வியால் நலம்பெறும் நிலையினை உருவாக்க முடியும் என இன்று சமூகம் எதிர்பார்க்கின்றது. சுருங்கச் சொல்லின் இந்நாட்டுக்கு முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால் கல்விக் கோட்பாட்டிலும் செயற்பாட்டிலும் ஆசிரியர்கள் புரட்சியாளர்களாக பணியாற்ற முன்வர வேண்டும்;

வாழக் கல்வி வழங்கும் கோட்பாட்டையும் செயற்பாட்டையும் அரசு தொடக்கிச் செயற்படுத்துவது சாத்தியமன்று. கடந்த காலக் கல்வி வரலாறு அரசு யதார்த்த நிலை உணர்ந்து கல்வியை வழங்கும் என்ற நம்பிக்கை தரவில்லை. எனவே தற்போதுள்ள கல்வித் திட்ட வரம்பினுள் தம்மாலியன்ற அளவு ஆசிரியர்களே வாழக் கல்வி வழங்க முன்வரவேண்டியுள்ளது. வகுப்பறை ஒன்றே கல்விச் சூழல் எனக்கருதாது வகுப்பறை, பாடசாலை, சமூகம் என்னும் மூன்று சூழலையும் மாணவர் வாழக் கல்வி பெறப் பயன்படுத்துவதே ஆசிரிய வாண்மைக்குச் சவாலாகும்.

ஆசிரியர்கள் பரீட்சை இலக்குடைய பாடச் செயற்பாடே மிக வலாக இடம்பெறச் செய்ய ஆசிரியர் முன்வரவேண்டும் வளர்முக நாட்டுக் குடிமகன் ஒவ்வொருவனும் தேசிய முன்னேற்றத்துக்கு தனது உச்சப் பங்களிப்பினைச் செய்யும் நிலை உருவாக்கப்பட வேண்டும் " நான் வந்தபோது இருந்ததை விட இச்சமூகத்தை நான் சிறந்த

இடமாக வீட்டுச் செல்ல வேண்டும். அது எனது சமூகக்கடன்" என்னும் உணர்வு ஒருவனது வாழ்க்கைக் குறிக்கோளாய் அமையக் கல்வி உதவவேண்டும்.

சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வால் பற்பல பிரச்சனைக்கு உள்ளாகியிருக்கும் நாடுகளில் கல்வியேபிரச்சனைகளுக்கு தீர்வுகண்டு முன்னேற்றமடையச் செய்யும் சிறந்த சாதனமாகும். பாடச்செயற்பாடு மாத்திரம் போதியதன்று. பாடச் செயற்பாடுகள் பெறும் அக்கறை, பாட இணைச் செயற்பாடுகளும் பெறுதல் அவசியம்.

- உடல்நலத்தையும் உளநலத்தையும் உறுதி செய்யப் பாடசாலைகளில் பெருந்தொகையினர் பங்குபற்றும் விளையாட்டு முயற்சிகளை ஒழுங்கு செய்தல்.

- மாணவர்கள் ஒன்று கூடல்கள் மூலம் நல்ல சமூக மனப்பாங்குகளை உருவாக்க முயற்சித்தல்.

- சமூக பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் புரிந்து பொருந்தி வாழச் சமய சமூக விழாக்களைப் பயன்படுத்தல்.
  தொழில் மகத்துவம், உடலுழைப்பின் உயர்வு என்பவற்றை உணர்த்தச் சிரமதான முயற்சிகளைப் பாடசாலையிலும் அதன் சூழலிலும் மேற்கொள்ளல்;

- தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள வாழ்க்கைத்திறன் கல்வியை ஆர்வத்தோடு பிள்ளைகள் கற்றுப் பயன்பெறச் செய்வதில் ஆசிரியர் அக்கறை கொள்ளல்.

- பாடசாலைத் தோட்டம், மரம் நாட்டல், சூழல் மாசுறாது பாதுகாத்தல் ஆகிய பயனுள்ள பணிகளை மேற்கொள்ளச் செய்தல்.

- சாரணர் இயக்கம் போன்ற அமைப்புக்களை உருவாக்கி சிறப்பாக செயற்படச் செய்தல்.

ஆகிய பாட இணைச் செயற்பாடுகளை அதிக சிரமமின்றி ஆசிரியர் மேற்கொண்டு கல்விப்பயனை உறுதிசெய்யலாம். இவற்றைச் செயற்படுத்துவதில் நடைமுறைப் பிரச்சனைகள் உள்ளன என்று கூறி ஆசிரியர்கள் உதாசீனம் செய்வது நியாயமில்லை. ஆசிரியத் தொழில் உயர் தொழில். இவ்வுயர்தொழில் வாண்மையுடையோர் தம்மைத் தமது தொழிலுக்காய் அர்ப்பணிக்கும் பக்குவம் உள்ளவ

றென்றே எதிர்பார்க்கப்படுகின்றது. ஆசிரியர்கள் உருவாக்கப்படுகின்றார்கள். உருவாக்கப்பட்டவர்கள் தமது பணியால் தம்மை உயர்த்திக் கொள்கிறார்கள். ஆசிரியரின் நல்வழி சமூகம் அவ்வழி.

இன்று எமது சமூகத்தைச் சீரழிக்கும் நோய்களைத் தீர்க்கும் வைத்தியராய் ஆசிரியர் தமது பாரிய பொறுப்புணர்ந்து பணியாற்ற முன்வர வேண்டும். சமூக விடுதலைக்கும், முன்னேற்றத்துக்கும் பாடசாலையை நன்கு பயன்படுத்திச் சமூகம் மாசகன்று மலர்ச்சி பெற்று மகிழ்ச்சியுற ஆசிரியர் சிந்தித்து செயலாற்ற வேண்டப்படுகின்றனர்.

" தூயவை துணிந்தபோது பழிவந்து தொடர்வதில்லை "

நாம் தொடர்பால் கற்கின்றோம்; பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு, தம்மை முன்னேற்ற முயற்சிப்பதே அறிவுடமை.

அறி அல்லது அழி

கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன்

நாம் வேண்டுவதெல்லாம் வாழுக் கல்வியே.

வறுமை கல்விக்குத் தடையாக விருக்க அனுமதிக்கக்கூடாது.

# 5

# சாந்துணையும் கற்க

நாம் வாழ்க்கை நெறியினைச் சிறப்பாக அமைத்துக் கொள்ளச் சீரிய சிந்தனை வழங்கியவர்களுள் திருவள்ளுவப்பெருமான் தலை சிறந்தவர். ஒருவன் தன் வாழ்நாள் முழுதும் கற்றுக்கொண்டேயிருக்க வேண்டும் என்னும் அவரது கல்விக்கருத்து இன்று உலகம் போற்றும் முன்னுரிமை பெற்றுக் காணப்படுகின்றது. வளர்ச்சியடைந்த நாடுகள், வளர்முக நாடுகள் என்ற பேதமின்றிக் கல்விப் பயனறிந்த நாடுகளெல்லாம் வாழ் நாள் கல்வியினை மக்களுக்கு வழங்குவதில் அதிக அக்கறை காட்டுவது கண்கூடு. கல்விதான் ஒரு நாட்டின் முன்னேற்ற ஏணியாய் மனித சக்தியினைத் திறன் மிக்க தாக்கி வையத்துள் வாழ்வாங்கு மக்கள் யாவரும் வாழ வழிவகுக்க வல்லது என்பது உணரப்பட்டுத் திட்டங்கள் தீட்டிச் செயல்படுத் தப்படுகின்றன. புதிய உலகுக்குப் புதிய அறிவு, திறமை, மனப் பாங்கு என்பன பொருந்தப்பெற்ற புதிய மனிதர் உருவாக்கப்பட வேண்டும் என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் வாழ்நாள் கல்வி வலியுறுத்தப்படுவதைக் காண்கிறோம்.

" யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன் சாந்துணையுங்
கல்லாத வாறு "

எனக் கூறிய வள்ளுவப் பெருமான் தனது கல்விக் கருத்துக்கு வேண்டிய விளக்கமும் தந்துள்ளார். ஒருவன் தன் வாழ்நாள் முழுதும் கற் பதன் மூலமே சீரிய வாழ்வு வாழ வழிபிறக்கும் என்பது அவர் துணிபு,

இன்று ஊர், நாடு, என்றோ இனம், மொழி, மதம் என்றோ சிறு சிறு எல்லைகளை வகுத்துக்கொண்டு கிணற்றுத் தவளையாய் யாரும் வாழமுடியாது. இதனை வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தெளிவுற உணர்த்தியிருந்தார். "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற பரந்த பண்பாட்டடிப்படையில் வாழ்வு அமைவதே சிறப்பு என்பது அவர் கருத்தாகும். அனைத்துலகப் பாங்கினனாக மனிதன் விருத்திபெற வேண்டும் என்பதும் இவ்வாறு உருவாக அவன் தொடர்ந்து கற்றுக்கொண்டேயிருக்க வேண்டும் என்பதும் அவரது சிந்தனையாகும். உலக சமாதானத்தை உறுதிப்படுத்த மனித உள்ளங்களைக் கல்வியால் பண்படுத்த விழைந்து நிற்கும் ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான பண்பாட்டு நிறுவனம் போன்ற அமைப்புக்கள் அயராது உழைத்துவருகின்றன. மனிதரிடை அமைதி சமாதானம், ஒற்றுமை, பரஸ்பர விளக்கம், சகிப்புத்தன்மை" என்னும் சீரிய பண்புகளை விருத்தி செய்வதன்மூலம் அனைத்துலகப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணல் இலகுவாகும் என்பது இன்று பொதுவான நம்பிக்கையாகக் காணப்படுகின்றது. இந் நம்பிக்கை உறுதிபெற நிறை மனிதர் உருவாக்கப்பட வேண்டும். நிறை மனிதரை உருவாக்கும் சிறந்த சாதனமே வாழ்நாள் கல்வியெனக் கொள்வது பொருந்தும்.

"வாழ்க்கையே கல்விப் பொருள்" செயற்படுத்த முடியாத சிந்தனைகள் பயனற்றவை மாத்திரமன்று, அவை ஆபத்தானவையுமாகும். எனவே பயனுள்ளதே கல்வி எனக் கொண்டு, "கற்பவை கற்று" மனிதன் தனக்கும் சமூகத்திற்கும் பயன்தரவேண்டின் வாழும் நாளெல்லாம் கற்கவேண்டியது அவசியமாகும். மனித இனம் பற்பல பண்பாட்டுப் பரிணாம நிலைகளைத் தாண்டிவந்துள்ள அதன் நீண்ட வரலாற்றில் பற்பல வாழ்க்கைத் தத்துவங்களையும் உருவாக்கி வாழ்ந்து வந்துள்ளது. இன்று சமதர்ம அடிப்படையிலமைந்த மக்களாட்சித் தத்துவமே வாழ்க்கைத் தத்துவத்தின் அடிநாதமாகக் காணப்படுகின்றது. கல்வித் தத்துவம் வாழ்க்கைத் தத்துவத்தின் பிரதிபலிப்பேயாகும். "வையத்துள் வாழ்வாங்கு வாழ" க்கல்வித் தத்துவம் உதவவேண்டும். அவ்வாறு வாழும் திறனை வழங்கும் கல்வி வாழ்நாள் கல்வியாகவே அமையவேண்டியது அவசியமாகிறது. வளர்ந்துவரும் உலகினைப் புரிந்து பொருந்தி வாழ வேண்டுமாயின் தொடர்ந்து கற்கவேண்டியது இன்றியமையாததன்றோ.

சமதர்ம மக்களாட்சித் தத்துவத்துக்கேற்ற கல்வி எனும்பொழுது மனிதன் தனது திறமையைத் தானே அறியவும் தனது வருங்காலத்தை உருவாக்குவதில் தான் பங்குபெறவும் உரிமை உடையவன் என்பது தெளிவாகின்றது கல்வியின் விருத்தியினாலேயே மக்களாட்சி மாட்சிமை பெற முடியும். மக்களாட்சியில் மனிதன் பற்பல பாத்தி

ரங்களில் பல்வேறு கடமைகளை நிறைவேற்றும் ஒன்றிணைந்த ஆளுமை விருத்தியுள்ள ஒரு நிறைமனிதனாக வேண்டும். மனித வாழ்வோடு தொடர்ந்து வளர்ந்துவரும் அறிவை வளர்த்துக்கொள்ளும் வாய்ப்பு எல்லோருக்கும் எப்பொழுதும் கிடைக்க வேண்டும். வேறுபட்ட காலங்களில் வேறுபட்ட காரணங்களுக்காக விருத்தியாக்கப்பட்ட கல்விக் கோட்பாடுகளைத் தொடர்ந்து கண்மூடித்தனமாகப் பேணிவருவது பேதமை. மனிதவாழ்வின் விழுமியங்கள் மாறுதன எனப்பழமைப்பற்றுல் பிற்போக்குப் பத்தாம்பசலியாகாது புதிய நிலைமைக்குத் தம்மை மாற்றிக்கொண்டு புதிய விழுமியங்களை உருவாக்கிக் கொள்ளாவிட்டால் முன்னேற்றம் காண முடியாது. இன்று நாம் எதிர்நோக்கும் வாழ்க்கைப் பிரச்சினைகள் யாவும் கல்விப் பிரச்சினைகளேயாகும். எனவேதான் வாழ்க்கைப்பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு துரித முன்னேற்றம் அடைய விழையும் நாடுகள் யாவும் அபிவிருத்தித் திட்டங்களில் கல்வி அபிவிருத்திக்கு முன்னுரிமை தருவதைக் காண்கின்றோம். நடைமுறையிலுள்ள கல்வித்திட்டத்தை வளர்ந்து வரும் புதிய நிலைமைக்கேற்பப் புனரமைக்க வேண்டிய அவசியம் பொதுவாக எல்லா நாடுகளுக்கும் உண்டு. எனினும் வளர்முக நாடுகளில் கல்விப் புனரமைப்பு மிகமிக அவசியமாகின்றது. மேலே தரப்படும் அபிவிருத்திபற்றிய புள்ளிவிபரங்கள் வளர்முக நாடுகளின் அபிவிருத்தி மட்டத்தை நாம் விளக்கிக்கொள்ள உதவும். புள்ளிவிபரங்களைத் திரட்டியோரதும், அவர்கள் கையாண்ட துன்முறைகளும் திறமைகளைச் சிறிது குறைத்து நோக்கினாலும் கூட வளர்ந்த நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்கும் இடையே நிலவும் அபிவிருத்தி ஏற்றத்தாழ்நிலை கவலைக்குரிய இடைவெளியை ஊகிக்க முடிகிறது.

பொதுவாக வளர்முகநாடுகள் பற்பல பிரச்சினைகளுக்குள்ளாகிக் காணப்படுகின்றன. எழுத்தறிவில்லாமை, உணவு பற்றாக்குறை, போக்குவரத்து வசதியின்மை, விரைவான மக்கட்பெருக்கம், மூலதன மின்மை

| | வளர்ந்த நாடுகள் | வளர்முக நாடுகள் |
|---|---|---|
| *(1) மக்கட் தொகை* | *1.1 பில்லியன்* | *3.4 பில்லி* |
| *(2) சராசரி தலா வருமானம்* | *$ 6468* | *$ 597* |
| *(3) சராசரி வாழ்வு எதிர்பார்ப்பு* | *72 வருடம்* | *56 வருட* |
| *(4) எழுத்தறிவு வீதம்* | *99 %* | *52 %* |
| *(5) சராசரி தலா கல்விக்கான செலவு* | *$ 286* | *$ 18* |
| *(6) சராசரி தலா இராணுவச் செலவு* | *$ 300* | *$ 29* |
| *(7) சராசரி தலா சுகாதாரச் செலவு* | *$ 199* | *$ 6.50* |

ஆதாரம்: "நியூஸ்வீக்" ஒக்ரோபர் 26, 1981

தொழில் வாய்ப்பின்மை கல்வி மதிப்பிறக்கம், என்பன இந்நாடுகளின் விரைவாகத் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சினைகளாகும். இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுமுகமாகக் கல்வியினைப் புனரமைக்கும் பொழுது வளர்ந்த நாடுகளின் விருத்தி மட்டத்தினை இலக்காகக் கொள்வதோ அல்லது அவர்களது கல்வித் திட்டங்களை அப்படியே பிரதிபண்ணுவதோ தவிர்க்கப்பட வேண்டும் என்பது அனுபவம் காட்டும் பாடமாகும். இதுவரை வளர்முக நாடுகள் முயற்சிக்கேற்ற முன்னேற்றம் காணமுடியாதமைக்கு முக்கிய காரணம் தமது தகுதிக்கும் தன்மைக்கும் மேற்பட்ட அபிவிருத்தி இலக்குகளை அடைய முயற்சித்ததாகும்.

எனவே குறிப்பாக வளர்முகநாடுகள் புதிய நிலைமைக்கு ஏற்ற வகையில் கல்வியினைப் புனரமைக்கும் பொழுது அது வாழ்நாள் கல்வியாக அமைய ஆவன செய்ய வேண்டும். இந்நாடுகள் பாடசாலைக் கற்றலைக் கல்வியின் தொடக்கமும் முடிவும் எனக் கொள்ளாது கல்வி பிறப்பிலிருந்து இறப்புவரை தொடரும் ஒரு வாழ்க்கைச் செயற்பாடாகக் கொள்ள வேண்டும். அடுத்த நூற்றாண்டில் முழுப் பொறுப்புடன் வாழப்போகும் இன்றைய மாணவர்களுக்குக் கல்வி வழங்க உருவாக்கப்பட்ட 1981 ம் ஆண்டு இலங்கைக்கல்வி வெள்ளை அறிக்கையில் மிக அவசியமான வாழ்நாள் கல்விக்கோட்பாடு வலியுறுத்தப்படாதது கவலைக்குரியதாகும். பாடசாலைப் புகாநிலைப் பிள்ளைகள் கல்வியும் முதியோர் கல்வியும் இவ்வெள்ளை அறிக்கையில் பெறும் இடம் இதன் குறைபாட்டினைத் தெளிவுறுத்துகின்றது. 1966 ம் ஆண்டில் வெளியான இந்தியாவின் கோத்தாரிக் குழுவின் அறிக்கையில் இவ்வம்சங்கள் பெற்ற அளவு முக்கியத்துவத்தாலும் 1981 ம் ஆண்டு இலங்கையின் வெள்ளை அறிக்கையில் அதாவது 15 ஆண்டுகளின் பின் உருவாக்கப்பட்ட இவ்வெள்ளை அறிக்கையில் இடம் பெறவில்லை என்பதைக்காணும் பொழுது நமநாட்டின் கல்வி வெள்ளை அறிக்கையின் தகுதி நிலையினை எண்ணி வேதனைப்பட வேண்டியுள்ளது. ஓய்வும் வாய்ப்பும் அதிகரிக்கும் காலகட்டத்தில் அவற்றைத் தனக்கும் சமூகத்துக்கும் தக்கமுறையில் பயன்படுத்திப் பயனுள்ள பாரம்பரிய விழுமியங்களோடு புதிய விஞ்ஞான தொழில்நுட்ப பண்பாட்டு உணர்வுள்ள வாழ்க்கை விழுமியங்களை உருவாக்காவிட்டால் இலங்கை போன்ற வளர்முகநாடு முன்னேற்றம் காண்பது பகற்கனவாகவே இருக்கும்.

வளர்முக நாடுகளில் கல்வி பயனுள்ள சிறந்த முன்னேற்ற சாதனமாக வேண்டுமாயின் முறைசார்ந்த கல்விநிலையங்களோடு சமூக பொருளாதார செயல்முறைப் படிவங்களும் கல்வி நோக்கங்களுக்காகப் பயன் படுத்தப்படவேண்டும். முறைசார்ந்த முறைசாராக் கல்வி நிலையங்களிடையே பிணைப்பிருப்பது அவசியமாகும். ஒரு தொழிலிலிருந்து பிறிதொரு தொழிலுக்கு இடம் பெயரும் திறமையினை வளர்த்துக்கொள்ளக் கல்வி உதவவேண்டும். கல்வி விஞ்ஞான தொழில நுட்பத் திறனை விருத்தி செய்யவேண்டும். க்ல்வியினைப் பெறறோா அதனை ஏனையோர்க்கும் பயன்படும வகையில் பகிர்ந்து கொள்ளுதல் ஒரு சமூக நீதியாகக் கருதப்படவேண்டும். பல திடமான காரிய சாதத்தியமான சட்டபூர்வமான கற்பிக்குமமுறை சம்பந்தமான ஒழுங்குகளும் மாற்றங்களும் இடம்பெற வேண்டும். கல்விக் கோட்பாட்டிலும் செயற்பாட்டிலும ஆய்வுகள் தொடர்ந்து இடம்பெற வேண்டும.

வளர்ச்சியடைந்த நாடுகள் நெடுங்காலமாகக் கல்வி ஆய்வு கூடங்களாகவே செயற்பட்டு வருகின்றன. நவசீனா அதன துரித முன்னேற்றத்துக்குக் கல்வியே சிறந்த சாதனமெனக் கருதிச் செயற்பட்டு வருவதைக் காணலாம். தென்கிழக்காசியாவில் எழுத்தறிவீதத்தில் சிறப்பிடத்தில் இருக்கின்றோம் எனப் பெருமை பேசும் இலங்கையில் அண்மைக் காலத்தில் பாடசாலை செல்லும் பிள்ளைகளின வீதம் குறைந்து வருவது கவலைக்குரியதே. எடுத்ததற்கெல்லாம் சட்டங்களை இயற்றுவதில் ஆர்வம் காட்டும் ஆட்சியாளர்கள் நாடு சுதந்திரமடைந்து முப்பத்துநான்கு ஆண்டுகளாகியும் அடிப்படை மனித உரிமைச் சாசனத்தில குறிப்பிட்ட கல்வி தொடர்பான அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில் இதுவரை கட்டாயக் கல்வி வழங்கச் சட்டமியற்றாத நிலையினை எண்ணி வேதனைப்பட வேண்டியதே.

சாந்துணையும் கல்வி இடம்பெறச் சமூகத்தில் புதிய கல்வி மனப்பாங்கு அவசியமாகும். இம்மனப்பாங்கு உருவாக்கத்தில் கல்வித் தொழிலைத் தமது வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டோர் முன்னோடிகளாக வேண்டும். ஆசிரியர்களும, அவர்களுக்கு அனுசரணையாயிருந்து ஆக்கமும் ஊக்கமுந்தர வேண்டிய கல்விச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள அமைச்சின் ஏனைய ஊழியர்களும் முழு ஆர்வத்தோடும் வாழ்நாள் கல்வியை மையமாகக் கொண்டு செயற்பட வேண்டும். வளர்ச்சியடைந்த நாடுகளில் கல்வி அமைச்சு மாத்திரமன்றி கல்வி, வழங்கும் வாய்ப்புள்ள ஏனைய அமைச்சுக்களும் கல்விச் சேவைக்கு உதவுவதைக் காணலாம். இதன் பெறுபேறாக முழுச் சமூகமுமே கற்கும் சமூகமாக மாறும் நிலை அந்நாடுகளில் உருவாகி

யுள்ளது. அமெரிக்காவில் பிள்ளைகள், பெற்றோர், தாத்தா, பாட்டி என்றும் மூன்று பரம்பரையினர் கற்றலில் ஈடுபடுவதையும், டென்மார்க், சுவீடன், நோர்வே போன்ற ஸ்காந்திநேவிய நாடுகளில் வாழ்நாள் கல்வியை வலியுறுத்த " மக்கள் பாடசாலைகள் " அமைத்து செயற்படவும் காண்கின்றோம். ருஷியாவில் பொதுவுடைமைக் கட்சியே கல்வி விருத்திச் சாதனமாக முழுச்சமூகமும் கற்றலில் ஈடுபட்டுத் தொண்டாற்றி வருவதையும் காணலாம். நவசீனாவில் பாடசாலைகள் தொழிற்சாலைகளாகவும் தொழிற்சாலைகள் பாடசாலைகளாகவும் செயற்பட்டுக் கல்வி விருத்தியினைத் துரிதப்படுத்தி நாட்டை முன்னேற்றும் நற்பணியில் முழுச் சமூகமுமே ஆர்வம் காட்டும் நிலையினைப் பாராட்ட வேண்டும். இத்தனை முயற்சிகளும் அவற்றின் நற்பயன்களும் நன்கறிந்தோராயினும் நம் நாட்டில் பாடசாலைச் சுவர்களுக்கப்பால் கல்வியை விருத்தி செய்யாது நாட்டை முன்னேற்ற முற்படும் தலைவர்களின் செயல் வேதனை தருவதாகும்.

" கற்றனைத்தூறும் அறிவு ", " அறிவினால் ஆகாததில்லை " " அறிவுடையார் எல்லாம் உடையார் " என்பதை மக்கள் நன்குணர்ந்து சாந்துணையும் கற்றுச் சிரிய வாழ்வு வாழ வழி செய்யப்படவேண்டும். ஆசிரியர்களே ஒரு நாட்டின் பண்பாட்டு அளவுகோல் எனப்படுவர். அவர்கள் தமது உயர்தொழில் எதிர்பார்ப்புக்களை என்றும் மறவாராகிச் செயற்படுவதன் மூலமே தமக்கும் தமது தொழிலுக்கும் பெருமதிப்புத்தேடிக் கொள்ள முடியும். " கருமமே, கட்டளைக் கல் " எனப்படுவதால் ஆசிரியர்கள் தமது முழு ஆர்வத்தோடும் " கற்கக் கற்கிறோம் " கற்கக் கற்பிக்கிறோம் எனக்கருதி மாணவர் மனங்கொள அவர்கள் செய்தும் சிந்தித்தும் கற்க ஏற்ற சூழலை உருவாக்குதலைத் தமது தலையாய கடனாகக் கருதிச் செயற்படவேண்டும். கசப்பான கல்வி அனுபவங்களே கல்வியைத் தொடாத தடையாகின்றன. என்பதனைக் கருத்திற்கொண்டு கற்றலை விடுதல் அறியா விருப்புடன் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கற்று இன்புறும் கற்கும் சமூகம் உருவாக்கப்பட ஆசிரியர்கள் உள்ளத்தால் பொய்யாது ஒழுகும் ஆய்ந்தறிந்தடங்கிய கொள்கைச் சான்றோராக வேண்டும்.

மாவட்ட சபைகளும் கிராமோதைய சபைகளும் மக்கள் சமதர்ம நிறைவு வாழ்வு வாழ வகுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது: மக்களாட்சித் தத்துவம் உண்மையான மலர்வு காண " எல்லோர்க்கும் கல்வி " அனைத்தறிவுக் கல்வி " " எக்காலத்தும் கல்வி " என்னும் கோட்பாடுகளுக்கமைவாகக் கல்வி வாய்ப்புக்களைப் பரவலாக்கப் புதிய கல்வி நோக்கும் போக்கும் உருவாக வேண்டும். உண்

ஊமயான கிராமோதயத்தின் அடிப்படை ஊற்றாகக் கல்வியே அமைய முடியும் என்பதனைக் கருத்திற்கொண்டு ' கற்கும் சகைம் '' உருவாக்கும் முயற்சியில் ஆற்றலுள்ள அனைவரும் அயராது உழைப்பதே அறிவுடமை. ஏழைக்கறிவுறுத்தலையே ஏற்றமிகு தொண்டெனப் பாரதியார் வலியுறுத்திய பண்பினை உணர்வோமாயின் ஒவ்வொருவனும் மற்றவனுக்குக் கற்பித்தலை ஒரு சமூக ரீதியாகத் தொண்டாகக் கொள்வதன் மூலமே சமூகநோய்களுக்கு மருந்து காண முடியும் என்பதனை உணர்தல் அவசியம். உண்மையே அறிவு அறிவே எழில், எழிலே இன்பம். அறிவு தரும் எழிலின்பம் வாழ்நாள் முழுதும் செறிந்து வாழ்வு வளம்பெறச் சாந்துணையும் கற்க.

ஒரு வளர்முக நாட்டுக்குமிக முக்கியமானவர், நுண்ணறிவு மீத்திறன் உள்ள புத்திஜீவிகள் அல்ல படைப்பாற்றலுள்ள நாட்டுப்பற்றாளரே.

பாடசாலைகள் மனித நாற்றுமேடைகள்.

தனது உள்ளார்ந்த நுண்ணறிவு வளத்தை விருத்தி செய்யாத நாடு விரைவில் அழியும்.

சமூகத்திறன்கள் உயிரியல் மாபடிப்படையில் பிற்சந்ததியினரால் பெற்றுக் கொள்ளப்படுவதற்று அது ஒவ்வொரு பரம்பரையாலும் கற்றுக் கொள்ளப்படவேண்டியனவாகும்.

மனப்பான்குகள் விருத்தி செய்யப்படுவன். மாற்றப் படத்தக்கன வெற்றிகரமான வாழ்வுக்கு அவசியமான மனப் பாங்குகளை மாணவர் விருத்தி செய்ய உதவுதல் சிரிய கல்விப் பணியாகும்.

ஆசிரியரின் வாண்மைக்கு ஏற்பவே அவரது கல்விப் பங்களிப்பும் அவர் பெறும் மதிப்பும் அமையும்.

ஆசிரியரின் அன்புக்கே மாணவர் ஏங்குவர். ஆரம்ப பாடசாலையில் ஆசிரியர் அன்பே கற்றலைப் பெரிதும் தூண்டும் இன்ப நிலையாகும்.

கற்றலை மிகவலியுறுத்தத் தூண்டும் முக்கிய சாதனம் வெற்றியில் ஏற்படும் மகிழ்ச்சியாகும்.

பட்டங்களைவிடப் பண்பே முக்கியம் என்பது ஆசிரியத் தொழிலில் பெரும் உண்மையாகும்.

கற்றல் பயன்மிக்கதாக இயன்றளவு அது நேரடி அனுப வத்தின் மூலம் பெறப்படுவது அவசியமாகும்.

கற்பதைக் கைவிட்டவருக்கு ஆசிரியத் தொழிலைத் தொடரும் அருகதை இல்லை.

வாக்கும் வாழ்வும் ஒன்றித்து வாழ்ந்து காட்டும் ஆசி ரியரே சமூகக் கலங்கரை விளக்குகள் அவர்களே வணக் கத்துக்குரியவராவர்.

பல்லாயிரம் ஆசான்களுக்கு ஆசானாய்த்

திகழ்ந்த

நற்சேவையின் நாயகன்

## திரு. ஆர். எஸ். நடராஜா அவர்களை

## வாழ்த்துவதில்

## உள்ளம் பூரிப்படைகின்றோம்.


வா/பூனி பூரி
நூலக.
இலக்கம்: 369
தி.இ.


செவிப்புலனற்றோர் புனர்வாழ்வுப் பிரிவின்

## செவிப்புலன் வலுவற்றோர் கைத்தொழிற்பேட்டை


*153, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

சேவையால் தேசத்தை நேசித்த ஆசான்

## திரு. ஆர். எஸ். நடராஜா

அவர்களை

## வாழ்த்துகின்றோம்.

# புதிய ஆனந்தா

## நகைமாடம்

185, சந்தோசம் தெரு. யாழ்ப்பாணம்.
[கஸ்தூரியார் வீதி]

முல்லை அச்சகம், ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.